## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – கல்வி – விடுதிகள் – 2018–19–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் 5 கல்லூரி விடுதிகள் புதிதாக துவங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந1(2)) துறை

அரசாணை(நிலை) எண். 80

நாள் 28.11.2018
விளம்பி, கார்த்திகை 12
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கப்பட்டது :

பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண். சி1/2437/2018, நாள் 05.09.2018.

---

**ஆணை:**

2018–2019 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் நலனுக்காக, ஒரு விடுதியில் 100 மாணவ / மாணவியர் தங்கிப் பயன்பெறும் வகையில் 5 கல்லூரி விடுதிகள் 2 கோடியே 10 இலட்சம் செலவில் புதிதாக துவக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரின் நலனுக்காக மொத்தம் 1343 விடுதிகள் இயங்கி வருகின்றன என்றும் புதிதாகத் துவங்க உத்தேசிக்கப்பட்ட 5 கல்லூரி விடுதிகளின் பெயர் விவரத்தினை பின்வருமாறும் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | மாவட்டம் | விடுதியின் பெயர் |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | | |
| 1 | திருச்சிராப்பள்ளி | பொறியியல் கல்லூரி மாணவியர் விடுதி, சேதுராப்பட்டி, ஸ்ரீரங்கம். |
| 2 | ஈரோடு | கல்லூரி மாணவியர் விடுதி, திட்டமலை, நம்பியூர் ஒன்றியம், கோபிசெட்டிபாளையம். |
| 3 | திண்டுக்கல் | கல்லூரி மாணவியர் விடுதி, வேடசந்தூர். |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | | |
| 4 | பெரம்பலூர் | கல்லூரி மாணவர் விடுதி, வேப்பந்தட்டை. |
| 5 | தருமபுரி | கல்லூரி மாணவியர் விடுதி, பாலக்கோடு. |

3. மேற்காணும் 5 புதிய கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளை 100 மாணவ, மாணவியர் எண்ணிக்கை கொண்ட விடுதிகளாக துவங்கி செயல்படுத்திட ஒவ்வொரு கல்லூரி விடுதிக்கும் கீழ்க்கண்ட பணியிடங்கள் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது என்பதால் இப்பணியிடங்களை தோற்றுவிக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் வேண்டியுள்ளார்.

| வ.எண். | பதவி விவரம் | ஊதிய விகிதம் | தலா ஒரு விடுதிக்கான பணியிடங்கள் எண்ணிக்கை | ஐந்து விடுதிகளுக்கான பணியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பி.எட்., பட்டதாரி போதகக் காப்பாளர்/ காப்பாளினி | ரூ.36400–115700 (நிலை 16) | 1 | 5 |
| 2 | சமையலர் மற்றும் உதவி சமையலர் | ரூ.15700–50000 (நிலை 1) | 2 | 10 |
| 3 | காவலர் / ஏவலர் | ரூ.15700–50000 (நிலை 1) | 1 | 5 |
| 4 | துப்பரவு பணியாளர் | (மாதம் ரூ.3000/– தொகுப்பு ஊதியத்தில்) | 1 | 5 |

4. மேற்குறிப்பிட்டுள்ள 5 புதிய கல்லூரி விடுதிகள் துவங்குவதற்கான தொடரும் செலவினம் ரூ.1,88,27,940/- மற்றும் தொடரா செலவினம் ரூ.20,90,250/– ஆக மொத்தம் ரூ.2,09,18,190/- (ரூபாய் இரண்டு கோடியே ஒன்பது இலட்சத்து பதினெட்டாயிரத்து நூற்று தொண்ணூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு இயக்குநர் கோரியுள்ளார்.

5. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து, 100 மாணவ/மாணவியர் தங்கும் வகையில் 5 கல்லூரி மாணவ, மாணவியருக்கான விடுதிகளை (3 பிற்படுத்தப்பட்டோர் + 2 மிகப்பிற்படுத்தப்பட்டோர் ) மேலே பத்தி 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் புதிதாக துவங்கிடவும், இவ்விடுதிகளை துவக்குவதால் ஆண்டொன்றிற்கு தேவைப்படும் மொத்த செலவினத்தில் இணைப்பு I-இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடர் செலவினம் ரூ.1,88,27,940/– மற்றும் இணைப்பு II-இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடரா செலவினம் ரூ.20,90,250/– சேர்த்து மொத்தம் ரூ.2,09,18,190/-ற்கு (ரூபாய் இரண்டு கோடியே ஒன்பது இலட்சத்து பதினெட்டாயிரத்து நூற்று தொண்ணூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் புதிதாக துவங்க ஆணையிடப்பட்டுள்ள 5 கல்லூரி விடுதிகளுக்கு ஒரு விடுதிக்கு தலா 1 காப்பாளர் / காப்பளினி, 1 சமையலர் மற்றும் 1 உதவி சமையலர் மற்றும் 1 காவலர் மற்றும் ஏவலர் என 5 விடுதிகளுக்கு மொத்தம் 5 பி.எட் பட்டதாரி போதகக் காப்பாளர்/ காப்பாளினி பணியிடங்கள் ரூ.36,400–ரூ.1,15,700 (நிலை 16) என்ற ஊதிய விகிதத்திலும்,

5 சமையலர் மற்றும் 5 உதவி சமையலர் பணியிடங்கள் ரூ.15,700–ரூ.50,000 (நிலை 1) என்ற ஊதிய விகிதத்திலும், 5 காவலர் மற்றும் ஏவலர் பணியிடங்கள் ரூ.15,700 – ரூ.50,000 (நிலை 1) என்ற ஊதிய விகிதத்திலும் நிரந்தர அடிப்படையில் தோற்றுவித்தும் மற்றும் ஒரு விடுதிக்கு தலா ஒரு துப்புரவு பணியாளர் வீதம் 5 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களை மாதம் ஒன்றுக்கு தலா ரூ.3,000/– வீதம் ஒப்பந்த ஊதியத்தில் (Contract Payment) நிரப்ப ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

7. மேற்காணும் பணியிடங்களில் பணியமர்த்தப்படும் பணியாளர்கள் அவர்கள் நியமன நாள் முதல் சம்பளம் மற்றும் இதர படிகளைப் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

8. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் இணைப்பு I மற்றும் II-இல் உள்ளவாறு பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்</u> **(ரூ. 1,25,65,914/–)**

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – AA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள்".

(து.தொ.கு. 2225–03–277–AA-0007)

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்</u> **(ரூ.83,52,276/–)**

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – BC – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள்".

(து.தொ.கு. 2225–03–277–BC-0002)

9. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுத் துணைப்பணி " (New Instrument Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.பொ–I) துறையில் தனியாகப் பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முண்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின விதிகள் 1963–இல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித் (வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கு உரிய கருத்துருவையும் 2018–2019 ஆம் ஆண்டிற்கான துல்லிய மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (பி.மி.பி (ம) சி.நலத்துறை/வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. மேற்காணும் 5 புதிய கல்லூரி விடுதிகளும் முறையாக துவக்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் மற்றும்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 59521/பி,மிபி/2018, நாள் 28.11.2018 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரெட்டு எண். 2058 (இரண்டாயிரத்து ஐம்பத்து எட்டு)--ன்படி பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஆ. கார்த்திக்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை-- 5.
இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நலன், சென்னை-- 5.
இயக்குநர், சிறுபான்மையினர் நலம், சென்னை--5.
மாநில கணக்காயர், சென்னை--18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை-- 1),
சென்னை--18. (பெயரில்).
மாநில கணக்காயர், (தணிக்கை--2),
சென்னை--18. (பெயரில்).
சம்பளக்கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை --5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

<u>நகல்</u> :
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை--9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக
உதவியாளர், சென்னை-- 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறைச் செயலர் அவர்களின் முதுநிலை
தனிச்செயலர், சென்னை--9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல (பிந3)த்துறை, சென்னை--9.
நிதி (பி.மி.பி./வ.செ.பொது I & II)த் துறை, சென்னை--9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/11/2018
பிரிவு அலுவலர்

29/11/18

## இணைப்பு–1

**அரசாணை (நிலை) எண்.80, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள். 28.11.2018–ன்படி புதிதாக துவங்க ஆணையிடப்பட்ட 5 கல்லூரி விடுதிகளின் தொடர் செலவின விவரம்**

[பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் – 3 மாணவியர் விடுதிகள், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் –2 (1 மாணவர் மற்றும் 1 மாணவியர் விடுதி)]

| வ. எண் | பதவி மற்றும் குறைந்தபட்ச ஊதியம் | கணக்குத் தலைப்பு பிற்படுத்தப்பட்டோர் நலன் | தொகை ரூ. | கணக்குத் தலைப்பு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | ஒரு பி.எட்., பட்டதாரி போதகக் காப்பாளர் / காப்பாளினி குறைந்தபட்சம் ஊதியம் ரூ.36,400/– (நிலை–16, ரூ.36,400 – 1,15,700) | (DPC 2225–03–277–AA–0007) | 10,18,488 | (DPC 2225–03–277–BC–0002) | 10,18,488 |
| 2 | இரு சமையலர்கள் குறைந்தபட்சம் ஊதியம் ரூ.15,700/– (நிலை–1, ரூ.15,700–50,000) | (DPC 2225–03–277–AA–0007) | 8,91,600 | (DPC 2225–03–277–BC–0002) | 8,91,600 |
| 3 | ஒரு காவலர் மற்றும் ஏவலர் குறைந்தபட்சம் ஊதியம் ரூ.15,700/– (நிலை–1, ரூ.15,700–50,000) | (DPC 2225–03–277–AA–0007) | 4,45,800 | (DPC 2225–03–277– BC–0002) | 4,45,800 |
| 4 | ஒரு துப்புரவு பணியாளர் மாதம் ரூ.3000/– ஒப்பந்த ஊதியம் (Contract Payment) | (DPC 2225–03–277–AA–3344) | 36,000 | (DPC 2225–03–277– BC–3349) | 36,000 |
| 5 | விடுதி வாடகை (ரூ. 20,000 x 12) | (DPC 2225–03–277–AA–0614 ) | 2,40,000 | (DPC 2225–03–277– BC–0619) | 2,40,000 |
| 6 | குறித்த கால பராமரிப்பு செலவினம் | (DPC 2225–03–277–AA–1819 ) | 15,000 | (DPC 2225–03–277– BC–1814) | 15,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | செய்தித்தாள் (ரூ. 270 x 10) (ரூ.2700)<br>சோப்பு மற்றும் தேங்காய் எண்ணெய் (ரூ.75 x 10 x 100) (ரூ.75000)<br>ஏனைய இனங்கள் (ரூ.1000) | (DPC 2225–03–277–AA–3415) | 78,700 | (DPC 2225–03–277– BC–3410) | 78,700 |
| 8 | 100 மாணவர்கள் மற்றும் 2 சமையலர்களுக்கான உணவுக் கட்டணம் (ரூ. 1000 x 10 x 102) | (DPC 2225–03–277– AA–6798) | 10,20,000 | (DPC 2225–03–277– BC–6793) | 10,20,000 |
| 9 | சிறப்பு உணவு செலவினம் (ரூ. 40 x 5 x 100) | (DPC 2225–03–277–AA–6798) | 20,000 | (DPC 2225–03–277– BC–6793) | 20,000 |
| **மொத்தம்** | | | 37,65,588 | **மொத்தம்** | 37,65,588 |
| 3 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளின் மொத்த செலவினம் (ரூ. 37,65,588X3) | | | 1,12,96,764 | 2 மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளின் மொத்த செலவினம் (ரூ. 37,65,588X2) | 75,31,176 |
| புதிதாக துவக்கப்படவுள்ள 5 விடுதிகளின் மொத்த தொடர் செலவினம் | | | | | 1,88,27,940 |

ஆ.கார்த்திக்
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

## இணைப்பு– II

**அரசாணை (நிலை) எண்.80, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள். 28.11.2018–ன்படி புதிதாக துவங்க ஆணையிடப்பட்ட 5 கல்லூரி விடுதிகளின் தொடரா செலவின விவரம்**

[பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் – 3 மாணவியர் விடுதிகள், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் –2 (1 மாணவர் மற்றும் 1 மாணவியர் விடுதி)]

| வ. எண் | பொருட்கள் | கணக்குத் தலைப்பு பிற்படுத்தப்பட்டோர் நலன் | மாணவியர் | கணக்குத் தலைப்பு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | மாணவர் | மாணவியர் |
|---|---|---|---|---|---|---|
| 1 . | மரச்சாமான்கள் (ரூ.40,000)<br>புத்தக அலமாரி (ரூ.12,000) | DPC 2225–03–277–AA–0552 | 52,000 | DPC 2225–03–277–BC–0557 | 52,000 | 52,000 |
| 2 | சுகாதாரக் குட்டைத் தகளி | DPC 2225–03–277–AA–1917 | 25,000 | DPC 2225–03–277–BC–1912 | – | 25,000 |
| 3 | பொருட்களும் வழங்கலும்<br>i. எரிவாயு இணைப்பு | DPC 2225–03–277–AA–2407 | 50,000 | DPC 2225–03–277–BC–2402 | 50,000 | 50,000 |
| | ii. பாத்திரம் | | 40,000 | | 40,000 | 40,000 |
| | iii. அரவை இயந்திரம் | | 25,000 | | 25,000 | 25,000 |
| | iv. குடிநீர் சுத்திகரிக்கும் கருவி | | 15,000 | | 15,000 | 15,000 |
| | v. இன்வெர்ட்டர் | | 15,000 | | 15,000 | 15,000 |
| | vi. ஜமக்காளம் (100 x ரூ.403) | | 40,300 | | 40,300 | 40,300 |
| | vii. முதலுதவி பெட்டி | | 1,250 | | 1,250 | 1,250 |
| | viii. தட்டு மற்றும் டம்ளர் (100xரூ.125) | | 12,500 | | 12,500 | 12,500 |
| | ix. விளையாட்டுக் கருவிகள் | | 6,000 | | 6,000 | 6,000 |
| | x. பெட்ஷீட் (100 x ரூ.250) | | 25,000 | | 25,000 | 25,000 |
| | xi. தலையணை (100 x ரூ.200) | | 20,000 | | 20,000 | 20,000 |
| | xii. வண்ணத்தொலைக்காட்சிப்பெட்டி (32" **LED**) | | 30,000 | | 30,000 | 30,000 |
| | xiii. பூச்சி அழிப்பான் | | 6,000 | | 6,000 | 6,000 |
| | xiv. மின் அரைப்பான் | | 6,500 | | 6,500 | 6,500 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | xv. இட்லி வேகவைப்பான் | | 13,500 | | 13,500 | 13,500 |
| 4 | புத்தகங்கள் வாங்குதல் | DPC 2225-03-277-AA-3424 | 40,000 | DPC 2225-03-277-BC-3429 | 40,000 | 40,000 |
| | ஏனைய செலவுகள் | | | | | |
| **மொத்தம்** | | | 4,23,050 | **மொத்தம்** | 3,98,050 | 4,23,050 |
| 3 மாணவியர் விடுதி துவங்குவதற்கான மொத்த செலவினம் (ரூ.423050 x 3) | | | 12,69,150 | 1 மாணவர் விடுதி மற்றும் 1 மாணவியர் விடுதி துவங்குவதற்கான மொத்த செலவினம் (ரூ.398050 x 1) + (ரூ.423050 x 1) | 8,21,100 | |
| புதிதாக துவக்கப்படவுள்ள 5 விடுதிகளின் மொத்த தொடரா செலவினம் | | | | | 20,90,250 | |

<u>பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவ. மாணவியர் விடுதிகளின்</u>
<u>தொடர் மற்றும் தொடரா செலவின விவரம்</u>

| விடுதிகளின் விவரம் | தொடர் செலவினம் | தொடரா செலவினம் | மொத்தம் |
|---|---|---|---|
| 3 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | 1,12,96,764 | 12,69,150 | 1,25,65,914 |
| 2 மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | 75,31,176 | 8,21,100 | 83,52,276 |
| மொத்தம் | 1,88,27,940 | 20,90,250 | 2,09,18,190 |

ஆ.கார்த்திக்
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்